IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.31/2024

DEPOSITION OF WITNESS P.W.11

| | | |
|---|---|---|
| NAME | : | SANTHOSH |
| FATHER'S NAME | : | DINAKARAN |
| VILLAGE | : | KATPADI |
| OCCUPATION | : | HC |
| AGE | : | 41 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 15th day of JUNE 2026.

**<u>சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.</u>**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது காட்பாடி காந்திநகரில் வசித்து வருகிறேன். தற்போது மேல்பாடி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.12.2019 ம் வருடம் காட்பாடி காவல்நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வந்தேன். அப்போது விபத்தில் இறந்து போன சுப்பிரமணி என்பவரின் உடலை உடற்கூராய்வு செய்ய காவல் ஆய்வாளர் வழங்கிய வேண்டுடகோள் கடிதத்தை வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனை மருத்துவரிடம் வழங்கினேன். பின்னர் பிரேத விசாரணை முடித்து உடலை உறவினர் வசம் ஒப்படைத்தேன். ஆய்வாளரிடம் அறிக்கை சமர்ப்பித்தேன் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

சொன்ன தேதியில் நான் மருத்துவமனைய செல்லவில்லை என்றும், ஆவணங்கள் காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டது என்றும், ஆய்வாளர் கேட்டு கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.31/2024

DEPOSITION OF WITNESS P.W.12

| | | |
|---|---|---|
| NAME | : | MANOGARAN |
| FATHER'S NAME | : | TEEKARAMAN |
| VILLAGE | : | KALPUDUR |
| OCCUPATION | : | SI RETIRED |
| AGE | : | 63 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 15th day of JUNE 2026.

**<u>சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.</u>**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் 30.04.2023 திருவலம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி பணி ஓய்வு பெற்றேன். தற்போது காட்பாடி கல்புதூல் வசித்துவருகிறேன். கடந்த 18.12.2018 ம் தேதிஇரவு 21.30 மணிக்கு காட்பாடி காவல் நிலைய உதவி ஆய்வளராக பணியில் இருந்தபோது சசிகலா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் த்ன்மைபடி நிலைய குற்ற எண்.752/2019 சட்டப்பிரிவுகள் 279, 304(எ) இதச பிரிவின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.முதல் தகவல் அறிக்கையும், புகார் மனுவையும் ் இணைத்து கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அனுப்பி வைத்தேன். பின்னர் ஒரு நகலை தன்னுடைய விசாரணைக்கு எடுத்துக்ெ காண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சதீஷ்குமார், விஜயகுமார் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவம் இடம் மற்றும் சுற்றுப்புறத்தையும் பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்தேன். அது முறையே **அ.சா.ஆ.5** மற்றும் **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் விபதில் இறந்து போன சுப்பிரமணி என்பவரின் உடலை வேலூர் அடுக்கம்பாறை சவக்கிடங்கில் வைத்து பஞ்சாயத்தார் சாட்சிகளான நந்தகுமார், ரவி, ஆறுமுகம், விஸ்வநாதன், கருணாகரன் ஆகியோர்களை விசாரித்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த அறிக்கை **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள்சசிகலா, ராணி, பரமேஸ்வரி' செந்தில்குமார், சசிகுமார், தட்சிணாமூர்த்தி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் விபத்தில் இறந்த போன சுப்பிரமணி என்பவரின் பிரேதேத்தின் மீது உடற்கூராய்வு செய்ய தலைமை காவலர் சந்தோஷ் என்பவர் மூலமாக வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைகசு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்தேன். பின்னர் 19.12.2019 ம் தேதி இறந்து போன சுப்பிரமணியின் உடலை உடற்கூராய்வு செய்து உறவினர் வசம் ஒப்படைத்தேன். பின்னர் விபத்து ஏற்படுத்திய அரசு பேருந்து பதிவு எண் TN01 AN0922 பேருந்தை மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தினேன். பின்னர் மோட்டார் வாகன ஆய்வாளர் கருணாநிதி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு

செய்து விபத்து ஆய்வறிக்கை பெற்றேன். அந்த விபத்து ஆய்வறிக்கை **அ.சா.ஆ.8**ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வழக்கின் எதிரி முருகய்யா என்பவர் 20.12.2019 ம் தேதி நிலையம் ஆஜரானவரை காலை 10.00 மணிக்க காரணம் கூறி கைது செய்து தக்க இரு நபர் ஜாமீனில் விடுவித்தேன். பின்னர் நடத்துனர் தியாகராஜன் மற்றும் மேலாளர் ராஜ்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கு கோப்பை காவல் ஆய்வாளர் புகழ் என்பவரின் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 11 வரை விசாரணை செய்ததில் என்னிடம் கூறியதையே அவரிடமும் கூறியதால் தனியாக மறுவாக்குமூலம் பதிவு செய்யவில்லை. பின்னர் இறந்துபோனவரின் உடலை உடற்கூராய்வு செய்த மருத்துவர் நாகேந்திர குமார் என்பவரை விசாரித்து உடற்கூராய்வு சான்றிதழ் பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். உடற்கூராய்வு சான்றிதழ் **அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் சந்தோஷ், மனோகரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

பின்னர் புலன் விசாரணை முடித்து 05.02.2020 தேதி எதிரியின் மீது சட்டப்பிரிவு 279, 304(A) இதச பிரிவின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இறந்த நபரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்றும், நஷ்டஈடு பெறுவதற்காக போடப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 15.06.2026 ஆம் தேதி பகரப்பட்டது.

S K P DILIP BABU

Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.